**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.108/2014**

**Prosecution Witnesses : 10**

| | | | |
|---|---|---|---|
| Name | : கார்த்திகேயன் | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)
**26.07.2024**
**முதல் விசாரணை**

நான் தற்போது விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோ.வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக பணியாற்றிவருகின்றேன். நான் இதற்கு முன்பு 05.07.2013 அன்று பகுதி அலுவலகம் திருமங்கலத்தில் மோ.வா.நிலை 1 ஆக பணியாற்றியபோது திருமங்கலம் நகர் ஆய்வாளரிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரையின் பேரில் டிஎன் 02 ஏஆர் 7531 என்ற கனரக சரக்கு வாகனத்தை அன்றைய தினமே மதியம் 2 மணிக்கு அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். அந்த ஆய்வின் போது வாகனத்தின் சேதாரங்கள் ஏதும் காணப்படவில்லை. கால் தடை திறன் 66 விழுக்காடாகவும் கைத் தடை திறன் வேலை செய்தது. டயர்கள் நல்ல நிலையில் இருந்தன. இந்த விபத்து எந்தவித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என்றும், நான் சான்றளித்தேன். மோ.வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.க. 5 குறியீடு செய்யப்படுகிறது.

இதே வழக்கில் தொடர்புடைய மற்றொரு வாகனமான டிஎன் 58 ஒய் 9078 என்ற இருசக்கர வாகனத்தை மாலை 5 மணிக்கு 07.08.2013 அன்று அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். அந்த ஆய்வின் போது வாகனத்தின் கீழ்க்கண்ட சேதாராங்கள் காணப்பட்டன. 1. முகப்பு விளக்கு மற்றும் முன் பக்க திசை காட்டி விளக்குகள் மற்றும் ஸ்பீடாமீட்டர் சேதமடைந்து காணப்பட்டது. 2.முன்பக்க பதிவு எண் பலகை வளைந்து காணப்பட்டது. 3. கேண்டல்பார் வலது புறம் உட்புறமாக வளைந்து காணப்பட்டது. 4. பெட்ரோல் டேங்க் வலது புறம் அமுங்கி காணப்பட்டது. 5.

லெக்கார்ட் வலது புறம் வளைந்துகாணப்பட்டது. 6. வலதுபுற புட்பிரேக் லிவர் லேசாக வளைந்து காணப்பட்டது. 7. வலதுபுற ஓட்டுனர் கால் வைக்கும் பகுதி வளைந்து காணப்பட்டது. 8. கேண்டல்பார் இடதுபுறம் லிவர் பொருந்தும் பகுதி நகர்ந்து காணப்பட்டது. 9. கேண்டல்பார்வலதுபுற லிவர் சேதமடைந்து காணப்பட்டது. வாகனம் இயக்கிபார்க்கக்கூடிய பார்க்கக்கூடிய நிலையில் இல்லாத காரணத்தினால் நிலை ஆய்வில் கால் தடை திறன் மற்றும் கைத் தடை திறன் நல்ல நிலையில் இருந்தன. டயர்கள் நல்ல நிலையில் இருந்தன. இந்த விபத்து எந்தவித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என்றும், நான் சான்றளித்தேன். மோ.வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ,6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் கு.வி.**

இருசக்கர வாகனத்தின் பின்புறத்தில் எந்த சேதாரமும் காணப்படவில்லை என்றால் சரிதான். ஒரு கனரக வாகனம் இருசக்கர வாகனத்தின் பின்புறமாக மோதியிருந்தால் ஒரு சிறு சேதாரமாவது இருசக்கர வாகனத்தின் பின்புறம் இருந்திருக்கும் என்றால் சரிதான். அதேபோல் கனரக வாகனத்தில் சேதாரம் இல்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்னதுபோல் விபத்து ஏற்பட்டியிருந்தால் ஏதாவது சேதாரம் ஏற்பட்டியிருக்கும் என்றால் மோதும் விதத்தை பொருத்து சேதாரம் ஏற்படலாம். இருசக்கர வாகனத்தின் ஓட்டுனராக ராமநாதன் என்பவரை நான் எங்களுடைய சான்றிதழில் காட்டியிருந்தேன். அது போலிசார் சொல்லி எனக்கு தெரியும். சிலம்பரசன் என்பவர் இருசக்கர வாகனத்தை ஓட்டியதாக போலிசார் எனக்கு வழக்கின் சரித்திர குறிப்புகள் கொடுத்திருந்தால் அதனை நான் காட்டியிருப்பேன். சிலம்பரசன் இருசக்கர வாகனத்தை ஓட்டியதாக எனக்கு குறிப்புகள் ஏதும் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். சிலம்பரசனுக்கு ஓட்டுனர் உரிமம் இல்லாததால் அவ்வாறு காட்டியிருந்தால் அதுபற்றி எனக்கு தெரியாது.